தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1972 டிசம்பர் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

பள்ளிகளுக்கான வேலை நாட்கள்

* 161 வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்தர நடுத்தரப் பள்ளிகளுக்கான பாடநாட்களின் கால வரம்பினைத் தமிழ்நாடு அரசு மாற்றி அமைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பள்ளிகள் (தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும்) ஆண்டொன்றுக்கு வேலை செய்ய வேண்டிய நாட்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு வேலை செய்ய வேண்டிய கால அளவு ஆகியவை பழைய பாடத் திட்டத்தில் இருந்தது போலவே புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வந்த பின்னரும் நீடிக்கலாம் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் மாணவர்களைத் தூண்டிவிடும் சில அரசியல் வாதிகளால், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் ஆகியவை அடிக்கடி மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி மூடப்பட்டிருக்கும் நாட்களை ஈடுசெய்ய, பள்ளி, கல்லூரி விடுமுறை நாட்களைக் குறைக்க வேண்டுமென்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்களும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 நாட்களும் கட்டாய வேலை நாட்களாக இருக்கின்றன. எந்தக் காரணத்தினால் பள்ளிகள் மூடப்பட்டாலும், ஆண்டின் இறுதியில் குறைந்த நாட்களுக்கு ஈடுசெய்ய பள்ளிகள் நடைபெற வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய நாட்டில் பள்ளி வேலை நாட்கள் குறைவு என்ற ஒரு கருத்து இருந்து கொண்டிருக்கிறதே. அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது ஓரளவு உண்மைதான். பிற நாடுகளில் ஆண்டு ஒன்றுக்கு 234 நாட்கள், 240 நாட்கள், 250 நாட்கள் பள்ளிகள் நடைபெறுகின்றன. நமது இந்திய நாட்டிலும் சில பல மாநிலங்களில் 230, 240 நாட்கள் பள்ளிகள் நடைபெறுகின்றன. நமது மாநிலத்திலும் பள்ளி வேலை நாட்களை அதிகமாக்கலாமா என்று கேட்டதற்கு ஆசிரியர் சங்கம், தங்களுக்கு வேலைப் பளு அதிகமாகும் என்று சொல்லி அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நமது மாநிலத்தில் முன்பு இருந்த முறையிலேயே வேலை நாட்கள் இருந்து வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கோடை கால விடுமுறை நாட்களைக் குறைத்து, பள்ளி வேலை நாட்களை அதிகப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படியானால் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோடை விடுமுறையைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆனால் இப்போது ஆரம்பப் பள்ளிகளில் '220 வேலை நாட்கள்' என்பதில் பள்ளித் தேர்வுகள் நடைபெறும் நாட்களும் அடங்கும். தேர்வுகள் நடத்துவதற்கு என்று 20 நாட்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்வு நாட்களைத் தள்ளி 220 வேலை நாட்கள் என்று வைக்கலாமா என்று கருத்துக்குக் கூட ஆசிரியர் சங்கம் கூடாது என்று சொல்லியிருக்கிறது. எனவே, இப்பொழுது தேர்வு நாட்களையும் சேர்த்து ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்களும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 நாட்களும் வேலை நாட்களாக இருந்து வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we find frequent changes in the number of School holidays. Sometime back the entire Saturday was declared as holiday and recently it was changed and only half-Saturday has been declared as holiday. May I know the reason for such frequent changes and also why there is difference in the number of holidays between high schools and elementary schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்து வருகின்ற சூழ்நிலையில்தான் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அதிலே மாற்றம் இல்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, பள்ளி நாட்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மாணவர்கள் மெதுவாகப் படித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். எனவே, மாணவர்கள் விரைவாகவும், நன்றாகவும் படிப்பதற்காக பள்ளி வேலை நாட்களைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளி நாட்களைக் குறைப்பது என்பது மாணவர்களை ஊக்கப்படுத்துவதாக இருக்காது. இப்போது இருக்கின்ற நாட்களே போதாது என்று இருக்கின்ற போது அதைக் குறைப்பது என்பது இயலாது.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, முஸ்லிம் பள்ளிகளில் வெள்ளிக் கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாட்களாக இருப்பதால் ஆசிரியர் களுக்கு சில சங்கடங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே மற்ற பள்ளி களில் இரண்டு நாட்கள் சேர்ந்து விடுவது போலவே, முஸ்லிம் பள்ளிகளிலும் வெள்ளிக்கிழமையிலும், சனிக்கிழமையிலும் விடுமுறை விடச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முஸலிம் பள்ளிகளில்தான் அப்படிச் செய்கிறார்கள் என்றில்லை; மற்றும் பல பள்ளி களிலும் அப்படிச் செய்கிறார்கள். சில பள்ளிகளிலும் புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை விடுகிறார்கள். சில பள்ளிகளில் செவ்வாய்க் கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் கூட விடுமுறை விடுகிறார்கள். ஆகவே, அது அந்தந்த பள்ளி நிர்வாகிகள், அங்குள்ள ஆசிரியர்களின் வசதிகளைப் பொறுத்து நடைபெறுகிறது. அதிலே அரசாங்கம் ஒன்றும் குறுக்கிடுவதற்கு இயலாது.

Conference of Chairman of Panchayat Union Councils

* 162 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a Conference of the Chairman of Panchayat Union Councils was held at Kodaikanal about the 12th May, 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் களின் மாநாடு ஒன்று கோடைக்கானலில் 1972 மே திங்கள் 12-ஆம் நாள்